**வரையறுக்கப்பட்ட தேசிய வியாபார முகாமைத்துவ கல்வி நிறுவனம் - 2021**

---

## 1. நிதிக் கூற்றுகள்

### 1.1 அபிப்பிராயம்

வரையறுக்கப்பட்ட தேசிய வியாபார முகாமைத்துவ கல்வி நிறுவனத்தின் 2021 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றுகை கூற்று, தேறிய சொத்துக்களின் மாற்றங்கள் கூற்று மற்றும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக் கூற்றுகளுக்கு ஏற்புடையதான குறிப்புகள் மற்றும் சாராம்சப்படுத்திய முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் என்பவற்றைக் கொண்டமைந்துள்ள 2021 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான நிதிக் கூற்றுகள், இலங்கை சனநாயக சோசலிச அரசியலமைப்புக் குடியரசின் 154(1) உறுப்புரையுடன் செர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வுச் செய்யப்பட்டது. பாராளுமன்றத்திடம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துகள் மற்றும் அவதானிப்புகள் இவ்வறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளது.

நிறுவனத்தின் 2021 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 ஆம் திகதியில் நிதிசார் நிலைமையினையும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான அதன் நிதி செயலாற்றினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு தரநியமம்படி (இ.க.த.நி) பிரகாரம் என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த கணக்காய்வு தரநியமம்படி எனது பொறுப்பு, இவ்வறிக்கையில் நிதிக்கூற்றுகளின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை வழங்கும் பொருட்டு என்னால் பெற்றுக்கொண்டுள்ள கணக்காய்வு சாட்சிகள் போதுமானதும் பொருத்தமானதெனவும் நம்புகின்றேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிறுவனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுகளின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவனத்திற்குள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல்

வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயன்ற வரை தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரிசோதனை செய்வதற்கு கணக்காய்வு விடயவெல்லையும் விரிவாக்கப்பட்டுள்ளது.

- தகவல் சமர்ப்பித்தல் தொடர்பானவிடத்து நிறுவனத்தின் கடமைகள் தொடர்ச்சியாக மதிப்பீட்டுக்கு உட்படும் வகையில் அதன் ஒழுங்கமைதல், முறைமைகள், திட்டங்கள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய கடித ஆவணங்கள் முறையாகவும் போதுமான அளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும், குறித்த முறைமைகள், திட்டங்கள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய கடித ஆவணங்கள் பயனுள்ளவாறு பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- ஏதேனும் எழுத்தினாலான சட்டத்திற்கு அல்லது நிறுவனத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட ஏதேனும் பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகி நிறுவனம் செயற்பட்டுள்ளது எனவும்.

- தமது தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளுக்கு இணங்கியொழுகி செயலாற்றப்பட்டுள்ளது எனவும்,

- வளங்கள், காலவரையறைகளினுள்ளும் ஏற்புடையற்பாலனவான சட்டங்களுக்கு இணங்கியொழுகவும் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும், பயனுறுதியாகவும் பெறப்பட்டுப் பயன்படுத்தப்பட்டுள்ளது எனவும்,

## 1.5 சட்டங்கள் விதிகள், ஒழுங்குவிதிகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுக்கு இணங்காமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | சட்டங்கள் விதிகள், ஒழுங்குவிதிகள் என்பவற்றின் தொடர் | இணங்காமை | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதி ஒழுங்குவிதிக் கோவையில் நிதி ஒழுங்குவிதி 371 (2) (ஆ) | நிமித்தக் கட்டுநிதி பதவிநிலை தரத்தில் உள்ள உத்தியோகத்தர்களுக்கு மட்டும் வழங்க முடியுமாயினும், 2021 ஆம் ஆண்டில் 70 சந்தர்ப்பங்களில் பதவிநிலையல்லாத உத்தியோகத்தர்களிடம் மொத்தம் ரூபா.4,808,370 ஆன நிமித்தக் கட்டுநிதி வழங்கப்பட்டிருந்தது. | கட்டுநிதி வழங்குதல், சிறிய எண்ணிக்கையிலான பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கு மட்டும் மேற்கொள்ள இயலாமை | நிதி ஒழுங்குவிதிகளுக்கு ஒழுங்கமைதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) 2018 செப்தெம்பர் 18 ஆம் திகதிய 01∴2018 ஆம் இலக்க அரச தொழில்முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 04 (யு) பிரிவு | சுற்றுநிருபத்தின் ஏற்பாடு-களுக்கு முரணாக சலு-கை அடிப்படையிலான மோட்டார் வாகன இறக்-குமதி அனுமதிப்பத்-திரத்தின் கீழ் இறக்குமதி செய்யப்பட்ட மோட்டார் வாகனம் நேரடி கொள்-வனவு முறையின் கீழ் ரூபா. 34,000இ000 தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. | இந்தப் பணிகளின் பொருட்டு பணிப்பாளர் சபையினதும் அரச தொழில்முயற்சிகள் திணைக்களத்தினதும் அனுமதி கிடைக்கப்-பெற்றுள்ளதுடன், பத்தி-ரிக்கை அறிவிப்புமூலம் பெறுகைப் பணிகளை மேற்கொண்டு ஆகக்-குறைந்த விலை கண-க்குகளின்கீழ் கொள்-வனவு மேற்கொள்ள-ப்பட்டுள்ளது. சுய நிதி-யிடல் நிறுவனமாக பணத்திற்கு நல்ல பெறுமதியை சான்றுப்ப-டுத்துவதற்கு எப்போதும் நடவடிக்கை எடுக்கப்பட்-டுள்ளது. | மோட்டார் வாக-னம் கொள்வ-னவு செய்வத-ற்கு அனுமதி கிடைக்கப்பெற்றி-ருப்பினும், சுற்று-நிருபம்மூலம் சலுகை அடிப்ப-டையிலான மோட்டார் வா-கன இறக்குமதி அனுமதிப் பத்-திரம் மூலம் கொள்வனவு செய்ய இயலா-தென குறிப்பிட-ப்பட்டுள்ளதால், சுற்றுநிரபத்திற்கு அமைவாக நட-வடிக்கை எடுத்-தல் வேண்டும். |
| (இ) 2003 யூன் 02 ஆம் திகதிய ீநுனு∴12 இலக்க அரச தொழில்முயற்சிகள் சுற்றுநிருபம் | | | |
| (ை) 7.4.5 பிரிவு | 2020 ஆண்டுக்காக வருடாந்த பொருட் ஒப்பாய்வு மேற்கொள்ள-ப்படவில்லை. | கொவிட் 19 நிலைமை காரணமாக மேற்கொள்-வதற்கு முடியவில்லை என்பதுடன், தற்போது ஆய்வு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு-ள்ளது. | சுற்றுநிருபம் பிரகாரம் உரிய திகதியில் பொ-ருட் மீளாய்வு நடவடிக்கை-களை முடிவுறு-த்தல் வேண்டும். |
| (ை) 8.3.3 பிரிவு | வருடாந்த ஊக்குவிப்பு படி செலுத்துவதற்காக சுற்றுநிருபத்தின் 6.5 பிரிவு பிரகாரம், நிறுவனத்தின் முன்னரான ஆண்டின் வருடாந்த கணக்குகள் மற்றும் கணக்காய்வாளர் அதிபதி அறிக்கை உள்-ளடக்கிய வருடாந்த அறிக்கை பாராளுமன்ற-த்தில் நிறைவேற்றப்படு-தல் அவசியமென குறிப்-பிடப்படினும், அதன்படி நடவடிக்கை மேற்கொள்-ளப்படவில்லை. | ஒவ்வொரு ஆண்டும் வருடாந்த அறிக்கை ஆங்கில மொழியல் தயாரித்து நேர்வரிசை அமைச்சிடம் சமர்ப்பிக்-கப்படும். | சுற்றறிக்கை பிர-காரம் நடவடி-க்கை மேற்கொ-ள்ளுதல் வேண்டும். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைபயன்

மீளாய்விற்கான ஆண்டில் தொழில்பாட்டு விளைபயன் ரூபா. 677,822,872 ஆன மிகை காணப்பட்டதுடன், அதற்கு நேரொத்ததாக கடந்த ஆண்டின் மிகை ரூபா. 468,968,670 ஆகும். அதன்படி நிதிசார் விளைபயனில் ரூபா. 208,854,202 ஆன விருத்தி அவதானிக்கப்பட்டது. இந்த விருத்திக்கு வருமானம் ரூபா. 189,932,802 ஆல் அதிகரித்தல் பிரதான காரணங்களாகின.

## 3. தொழில்பாட்டு மீளாய்வு

### 3.1 பொருளாதாரமற்ற கொடுக்கல்வாங்கல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| துணைவேந்தர் இல்லத்தில் உணவு சமைக்கும் நடவடிக்கைகளின் பொருட்டு 2021 ஆண்டில் 34 சந்தர்ப்பங்களில் ரூபா. 1இ505இ836 ஆன பணத் தொகை முற்பணமாக பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. | இந்த செலவினம் நாளாந்தம் கிளை தலைவர்களின் பங்களிப்புடன், துணைவேந்தர் உத்தியோக-பூர்வ இல்லத்தில் நடாத்தப்படு-கின்ற கூட்டங்கள் பொருட்டு ஆவதுடன், இதற்காக பணிப்பாளர் சபையின் அனுமதி பெற்றுக்கொ-ள்ளப்படவில்லை. | நாளாந்தம் நடாத்தப்படு-கின்ற கூட்டங்களுக்கு ஏற்புடையதான கூட்ட அறிக்கைகள் கணக்காய்-விடம் சமர்ப்பிக்கப்பட-வில்லை என்பதுடன், கட்டுப்பாட்டுச் சபையின் அனுமதியுடன் அத்தியா-வசிய செலவினங்களை மேற்கொள்வதற்காக மட்-டும் நிறுவனத்தின் பணம் செலவிடுதல் வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ வினைத்திறனின்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| நிறுவனத்தின் உள்ளக நடவடிக்கைகளின் கட்டுப்பாடு-களுக்கு ஏற்புடையதான நிதி கைந்நூல் பொருட்டு பொது திறைசேரி அனுமதி பெற்றுக்-கொள்ளப்படவில்லை. | தேவையான எல்லா அதிகாரங்-களும் பணிப்பாளர் சபைக்குரிய-தாவதால், கைந்நூல் பணிப்பாளர் சபையால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. | பணிப்பாளர் சபையின் அனுமதிக்கமைவாக திறைசேரி செயலாளரின் அனுமதி பெற்றுக்கொள்-வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.3 தொழில்பாட்டு வினைத்திறனின்மை**

-----------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
| --- | --- | --- |
| பல்கலைக்கழகத்தில் இடர் முகாமைத்துவ கொள்கை (சுளைம ஆயயெபநஅநெவ ீழடஉைல) தயாரிக்-குமாறு உள்ளக கணக்காய்வுமூலம் பரிந்துரைக்கப்படினும், அதன் நடவடிக்கைகள் 2021 திசெம்பர் 31 ஆம் திகதியிலும் முடிவுறுத்தப்படவில்லை. | எல்லா பணிகளும் உள்ளடங்கும் வகையில் இடர் முகாமைத்துவ கட்டமைப்பு தயாரித்தல் தற்போது மேற்கொள்ளப்படுவதுடன், அதன் பொருட்டு பிரிதொரு குழுவை எதிர்வரும் பணிப்பாளர் சபை கூட்டத்தில் நியமனம் செய்யப்படும். | இடர் முகாமைத்துவ கொள்கை தயாரிப்பதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |